# வெஸ்டன் இந்தியா மிஷன்
# Western India Mission

WESTERN INDIA MISSION

**செய்திமலர்** **மார்ச் 2022**

கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு,

புதிய மாதத்தைக் காணச் செய்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். கொரோனாவின் தாக்கம் முற்றிலுமாகக் குறைந்து இயல்பு சூழ்நிலைக்கு மாற கிருபை செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். கொரோனாவினால் பாதிக்கப்பட்டு வீட்டிலும், மருத்துவமனைகளிலும் இன்னும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருப்போர் விரைவில் குணமடைய தொடர்ந்து ஜெபிப்போம். மேலும் சிறுநீரகக்கோளாறு, அதிகமாக காணப்படும் மார்பு புற்று நோய், இருதய சம்பந்தமான நோய் மற்றும் மனஅழுத்தம் காரணமாக தற்கொலைகள் பெருகிவரும் இந்நாட்களில் ஜனங்கள் இயேசுவின் அன்பை அறிந்து கொள்ளவு, வியாதியிலிருந்து சுகம் பெறவும், மனஅழுத்தத்திலிருந்து விடுதலை பெறவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நம் நாட்டில் தவறான வழியில் பணம் சம்பாதிக்கும் கும்பலால் பெண் குழந்தைகள் கடத்தப்பட்டு விபசாரவிடுதிகளுக்கு விற்கப்படுகிறார்கள். இப்படி விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட பெண்கள் இயேசுவின் அன்பை அறிந்து, மனம் திரும்பி, பரிசுத்தமாய் வாழ்வதற்காக பரிசுத்த தேவனை அவர்களுக்கு அறிவிக்கும் பணியில் ஈடுபடும் தேவ ஊழியர்கள் இக்கும்பலால் கொடூரமாக தாக்கப்பட்டு மீண்டும் ஊழியம் செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். சில வேளைகளில் மரணத்தை சந்தித்த ஊழியர்களும் உண்டு. இந்த பெண்கள் மத்தியில் ஊழியம் செய்யும் தேவ ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும், விபசாரத்தில் ஈடுபடுத்தப்படும் பெண்கள் பரிசுத்த தேவனின் அன்பை அறிந்து வாழ்க்கையில் மாற்றத்தை பெற்றுக்கொள்ளவும் விசேஷமாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நம்முடைய பணித்தளங்களில் உள்ள விசுவாசிகளுக்கு விநியோகிக்கும்படி ஹிந்தி, மராத்தி, குஜராத்தி மொழிகளில் வேதமாகமங்கள் தேவைப்படுகிறது. அநேக தேவபிள்ளைகள் இம்மொழிகளில் வேதாகமமாகவோ பணமாகவோ கொடுத்து உதவியிருக்கிறார்கள். அவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் நன்றி செலுத்துகின்றோம். இன்னும் வேதாகமம் கிடைக்கப் பெறாத விசுவாசிகளின் கரங்களில் வேதாகமம் கிடைக்கச் செய்ய, உதவும் தேவபிள்ளைகளை



பூர்கி ஆலயத்தில் பெண்கள் கூடுகை

எழுப்பித்தர விசேஷமாக ஜெபித்துக்கொள்ளுங்கள். இனி காலம் செல்லாது. கடைசி நாட்களுக்குள்ளாய் இருக்கிறோம். தேவனுடைய வருகை மிக சமீபம். அதற்குள்ளாக எல்லாருடைய கரங்களிலும் வேதாகாமம் கிடைக்கப் பெற, தேவ சித்தம் நிறைவேற ஜெபித்துக் கொள்ளுங்கள். சிறுபிள்ளைகளுக்கு சிறுவர்வேதாகமம் தேவைப்படுகிறது. தேவைகள் சந்திக்கப்பட, சிறுவர்கள் தேவராஜ்யத்திற்கு ஆயத்தமாக்கப்பட, வேதவசனங்கள் அவர்கள் உள்ளத்தில் விதைக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இந்த ஆண்டிலும் வருகிற லெந்து நாட்களின் ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். திருச்சபைகளில் ஆராதனைகள் தடையின்றி நடைபெறவும், ஜனங்கள் தவறாமல் ஆராதனைகளில் கலந்து கொள்ளவும் ஜெபியுங்கள். லெந்து நாட்களில் திருச்சபை மக்கள் தங்களைத் தாங்களே சோதித்து அறிந்து, பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடைந்து தேவ ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்களாய் மாற ஜெபியுங்கள். நம்முடைய மிஷன் ஊழியர்களை தேவன் தம்முடைய நாம மகிமைக்காவும், இராஜ்ய விருத்திக்காகவும் இந்த லெந்து கால சிறப்பு கூடுகைகளில் வல்லமையாக பயன்படுத்தவும், ஊழியர்களின் சுகத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும், விசேஷமாக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

## செய்தி : தேவ சாயலில் மனிதன்

இந்த உலகத்தில் பல கோடிக்கணக்கான கடவுள்கள் இருக்கிறார்கள். அந்த கடவுள் மனிதனை படைத்தார் என்பது அவர்களின் மதம் சார்ந்த நம்பிக்கை. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்தவர்களாகிய நம்மை, ஆண்டவர் தம்முடைய சாயலாகவே படைத்தார் என்று விசுவாசிக்கிறோம். வேதம் நமக்கு அதை தான் சொல்கிறது. ஆதி 1:2 தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். நாம் தேவனுடைய சாயலாய் இருக்கிறோம். நாம் அனேக நேரங்களில், நான் ஆண்டவரைப்போல இருக்க வேண்டும், அவரைப் போல வாழ வேண்டும் என்று மற்றவர்களிடம் சொல்லுவது வழக்கம். நிச்சயமாகவே தேவனுடைய சாயலை பெற்றிருக்கிற நாம் அவரைப் போல வாழ அழைக்கப்பட்டு இருக்கிறோம்

தேவன் அவருடைய குணாதிசயங்களை, அதாவது தமக்குள் இருக்கும் இயல்புகளை, பண்புகளை, குணநலன்களை மனிதனுக்குள்ளும் வைத்திருக்கிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.



பெண்கள் உபவாச கூடுகை டாங்ஸ் மலை

- தேவன் ஆளுகை செய்கிறவர் - மனிதனுக்கும் ஆண்டுகொள்கிற ஆற்றலைக் கொடுத்தார்.
- தேவன் அதிகாரமுள்ளவர் - மனிதனுக்கும் அதிகாரத்தைக் கொடுத்தார்.
- தேவன் படைக்கும் ஆற்றலைக் கொண்டவர் - மனிதனும் புதிது புதிதாக எதாவது படைக்க வேண்டும் என்று ஆவல் கொண்டவன்.
- தேவன் சுயமாக செயல் படுகிறவர் - அதேபோல மனிதனையும் தன்னிச்சையாக செயல்படுகிறவனாகப் படைத்தார்.
- ஆண்டவருக்குள்ளாக அன்பு பரிமாற்றம் இருந்தது - அதே போல் மனிதன் மற்றவருடைய அன்பை எதிர்பார்த்தும், அன்பு செலுத்தியும் வாழ்கிறான்.
- தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்து ரசிக்கிறவர் - அதே இயல்பு மனிதனுக்கும் உண்டு.

இன்னும் அனேக காரியங்களை நாம் ஒப்பிட்டு பார்க்கலாம். நாம் கிறிஸ்துவின் சாயலை பெற்றிருக்கிற நாமும் நம்முடைய வாழ்க்கையும் எப்படி பட்டதாய் இருக்கிறது என்று சற்று சிந்தித்து பார்க்க அழைக்கப்படுகிறோம்.

இயேசு கிறிஸ்துவின் குனநலன்கள் நம்மில் இருக்கிறதா என்று சற்று சோதித்து பார்ப்போம்.

## 1. பரிசுத்தர் :

வேதம் சொல்லுகிறது, நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள் என்று (லேவி 11;45, 20:26; 1 பேதுரு 1:16). நாம் கிறிஸ்துவைப் போல் தூய்மையான வாழ்க்கை வாழவும், கறையற்ற வாழ்வு வாழவும் இந்த உலகத்தில் உண்டாக்கப்பட்டு இருக்கின்றோம்.

பரிசுத்தம் என்றால் தினமும் வேதம் வாசித்து ஜெபித்துவிட்டால் மட்டும் போதும் என்பதல்ல; நம்முடைய செயல்களும், செயல்பாடுகளும், சிந்தனைகளும் சரியானதாய், தூய்மையுள்ளதாய் இருக்க வேண்டும். கொடுக்கப்பட்ட வேலைகளில் உண்மையாய் இருப்பது, என்னால் யாரும் தீங்கு அனுபவிக்கக் கூடாது என்று நினைப்பதும் சரியான வாழ்க்கை. நம்முடைய உள்ளான மனிதனும், வெளியரங்கமான வாழ்க்கையும் ஆண்டவருக்கு பிரியமானதையும் , மற்றவர்களுக்கு சாட்சியுள்ளதாயும் இருக்க வேண்டும். ஆண்டவருடைய கட்டளைகளை கைக்கொண்டு அவர் வழியில் நடக்கும் போது நம்மை அவருடைய பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துகிறார் என்று உபாகமம் 28:9 ல் வாசிக்கிறோம்.

சிறுவர் கூடுகையின் ஜெப நேரம் - வியாரா



ஆம் பிரியமானவர்களே, நிச்சயமாகவே நாம் ஆண்டவருடைய கட்டளைகளைக் கைக் கொள்ளுகிறபோது அவர் நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். பரிசுத்தம் கிறிஸ்தவ வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாய் இருக்கிறது.

## 2. கரிசனையுள்ளவர்:

நமது ஆண்டவர் கரிசணைவுள்ளவராக, இரக்கமுள்ளவராக, கருணையுள்ளம் கொண்டவராக இருக்கிறார். நம்முடைய ஆண்டவர் இரக்கமும், மனதுருக்கமும், நீடிய சாந்தமும், தயவுமுள்ளவர் என்று பார்க்கிறோம் (சங் 103:8 145:8,9). இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்தபோது வியாதியஸ்கர்களைக் கண்டு மனதுருகினார் (மத்தேயு 14:14). ஆம் அவர் கரிசனையுள்ள, மனதுருகிற ஆண்டவரால் இருக்கிறார். அவர் மக்கள் மீது கொண்டுள்ள் கரிசனையாள் கிராமம் கிரமமாக, பட்டணம் , பட்டணமாக சென்று ஆண்டவருடைய இரட்சியத்தை குறித்து பிரகடணப்படுத்தினார் என்பதை நாம் பார்கிறோம். யாரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதே அவர் விருப்பம். ஆண்டவருடைய சாயலை பெற்றிருக்கிற நாமும் அவரைப்போல் சிந்தையுள்ளவர்களாய் இருக்க நாம் அழைக்கப்பட்டு இருக்கிறோம்.

## 3. அர்பணிப்பு:

பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற அவர் தம்மை முழுவதுமாய் அர்பணித்துக் கொண்டார். அவரின் வாழ்க்கை சுயத்தை சார்ந்தது அல்ல. சுய நலமில்லா வாழ்க்கை, மற்றவர்களுக்கான வாழ்க்கை தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்தார் என்று பார்க்கிறோம். மனிதர்களை நித்திய இராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்கள்ய் மாற்ற அவர் தம்மை அர்பணித்துக் கொண்டார். தேவைகளை பூர்த்தி செய்ய அவர் தம்மை அற்பணித்துக் கொண்டார். அவர் சமுதாயத்தில் தன்னை ஒரு பெரிய தலைவராக நிலை நிறுத்திக் கொள்ளாமல் தம்மை தாமே தாழ்த்தி, வெறுமையாக்கிக் கொண்டார். சிலுவையின் மரண பரியந்தம் கீழ்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார் என்று (பிலி 2:8ல் வாசிக்கிறோம்) அதுமத்திரமல்ல பிலி 2:7 -ல் தம்மை தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபம் எடுத்தார் என்று பார்க்கிறோம். அவருடைய திருப்பணியை நாம் செவ்வனே செய்ய வேண்டுமானால் நமக்குள்ளாய் முழு அர்பணிப்பு தேவை.நாம் நம்மை தேவனுக்கு அடிமையாக்கிக் கொள்ளும் போது பரிசுத்தமாகுதல் நமக்கு கிடைக்கிறது அதனுடைய முடிவோ நித்திய ஜீவன்.



வீட்டுக் கூடுகை - முக்குடுபன

நாம் கிறிஸ்துவால் அடிமைகளாய் இருந்தால் பரிசுத்தமாக்கப் படுகிறோம். நித்திய ஜீவனும் நமக்கு கிடைக்கிறது என்று பார்க்கிறோம். இயேசு கிறிஸ்து தம்மை முழுவதுமாய் ஆண்டவரின் சேவையில் அர்பணித்துக் கொண்டது போல நாமும் தாழ்மையை தந்து அற்பணிக்கும் போது ஆண்டவர் நிச்சயமாக நம்மை ஆசிர்வதிக்க வல்லவராய் இருக்கிறார். பிரியமானவர்களே, தேவசாயலாய் இருக்கிற நாமும் பரிசுத்தமாய் ஜீவிக்க, இரக்கமும் , கருணையுள்ளம் கொண்டவர்களாய் இருக்க அர்பணிப்பான வாழ்க்கை வாழ முயற்சிகளை வெய்வோம்.

தேவனுடைய சாயலை பெற்றிருக்கிற நாம் அவரைப்போல் வாழ, சாட்சியாய் ஜீவிக்க கிறிஸ்துவை நமமுல் பிரதிபலிக்க நம்மை நாமே அர்ப்பணிப்போம். கர்த்தர் நிச்சயமாக நம்மையும், நம்முடைய குடும்பங்களையும், ஊழியங்களையும், நாம் செய்யும் பணிகளையும் ஆசிர்வதிப்பாராக.

## மருத்துவ ஜெபவிண்ணப்பங்கள்

நமது பூர்கி பணித்தளத்தில் யோஹான் என்ற ஆறு மாத குழந்தைக்கு தலையில் தேங்கியுள்ள நீரை வெளியேற்ற அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என மருத்துவர்கள் கூறிவிட்டனர். இவனது தந்தை இவன் பிறந்த சில நாட்களில் இறந்து போனார். இவன் தாய் மூன்று குழந்தைகளுடன் மிகவும் கஷ்டப்படுகிறார். குழந்தையின் பூரண சுகத்திற்காக ஜெபியுங்கள்.







பூர்கி பணித்தளத்தில் மாலு கோட்டா என்ற 50 வயது சகோதரர் கால்களில் கொப்பளங்களினால் வேதனைப் படுகிறார். அவருடைய குடும்பத்தினர் அவரை கைவிட்டு விட்டனர். போதிய மருத்துவ வசதி இல்லாத காரணத்தினாலும் பொருளாதார நெருக்கடியினாலும் அவர் மிகவும் சிரமப்படுகின்றார். அவருக்கு நல்ல மருத்துவ உதவி கிடைக்கவும், முழுக் குடும்பமும் தேவனை சொந்த இரட்சகராக ஏற்று கொள்ளவும் ஜெபியுங்கள்.

அதே பகுதியைச் சார்ந்த தல்சு காடுங்கா என்ற சகோதரருக்கு சிறுநீர் வெளியேறும் பாதையில் ஏற்பட்டுள்ள அடைப்பை சரி செய்ய போதிய பொருளாதார வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார். இதனால் அவருக்கு சில பக்கவிளைவுகள் ஏற்படுகின்றது. இவை அனைத்தும் மாறவும் பூரண சுகம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

தேவன் உங்கள் உள்ளத்தில் ஏவுவாரானால் இவர்களுடைய மருத்துவ செலவீனங்களை சந்திக்க உங்களை அன்போடு கோட்டுக்கொள்ளுகிறோம். மருத்துவர்கள் பரிந்துரையின்படி இவர்கள் மூவரின் மருத்துவ செலவுகளுக்கு ரூ.2,75,000/- தேவை. அந்த தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

# ஜெபவிண்ணப்பங்கள்

- எமிலி என்ற கிராமம் பூர்கியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த கிராமத்தில ஒரு விசுவாசி கூட இல்லாத சூழ்நிலை நிலவுகிறது. சுமார் 250 வீடுகள் மற்றும் 1000 நபர்கள் வசிக்கும் கிராமம் இது, ஊழியர்கள் இந்த கிராமத்தில் நுழையவே கடினமான சூழ்நிலை நிலவுகிறது. பிப்ரவரி மாதம் தேவனுடைய கிருபையால் சுதாகர் துர்கே என்கிற நபருக்கு நமது ஊழியர் சகோ. விஜயக்குமார் சுவிசேஷம் அறிவித்து வந்துள்ளார். இவர் சந்திக்கப்பட, இந்த வருடத்தில் இந்த கிராமத்தில் சபை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

- மர்கல்டோலா என்ற கிராமம் பூர்கியில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. அநேகர் இந்த கிராமத்தில் ஆண்களும் பெண்களும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக உள்ளனர். பிடிக்கப்பட்டுள்ளனர். நமது பூர்கியைச் சுற்றியுள்ள கிராமங்களில் இந்த கிராமத்தில் தான் அதிகமாக சாராயம் வடிக்கின்றனர். இந்த மக்கள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

- பிம்பிரி பணித்தளத்தில் சாய்கேடா என்ற கிராமத்தில் லஷ்மி என்ற சகோதரி குடும்பத்தில் சமாதானம் இல்லாமல் மிகவும் மனச் சோர்வுடன் உள்ளார். அவருடைய குடும்பத்தில் சாமாதானமான சூழ்நிலை உருவாகவும் முழுக் குடும்பமும் விசுவாசத்திலே வளரவும் ஜெபியுங்கள்.

- நமது பிம்பிரி பணித்தளத்தில் கரந்சா பகுதியல் கட்டோல் என்ற கிராமத்தில் 6 விசுவாசிகள் ஞானஸ்நானம் எடுக்க தயாராக உள்ளனர். அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் இவர்கள் மூலமாக அவர்களுடைய முழுக்குடும்பமும் தேவனை ஏற்று கொண்டு விசுவாசத்தில் வளர்ந்து சபையில் சேர்க்கப்பட ஜெபியுங்கள்.

- பூர்கி பணித்தளத்தில் கட்டப்பட்டு வருகிற மிஷனரி இல்லத்தைக் கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற மாதத்திலே பிரதிஷ்டை செய்ய ஆயத்தப்பட்டு வருகின்றோம். அதின் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும் வேலைகள் அனைத்தும் நேர்த்தியாய் நிறைவடையவும் ஜெபியுங்கள்.

- பிம்பிரி பணித்தளத்தைச் சேர்ந்த தீபா என்ற சகோதரியின் கால்களில் எதிர்பாராத விதமாக வெந்நீர் பட்டு காயம் ஏற்ப்பட்டது. ஜெபத்தின் மூலமாக காயம் குணமடைந்து வருகிறது. தேவன் அவருக்கு பூரண சுகம் தர ஜெபியுங்கள்.



ஆர்வமுடன் வசனத்தைக் கேட்கும் பிம்பிரி சிறுவர்கள்

# ஜெபவிண்ணப்பங்கள்

- இரண்டு வருட நீண்ட இடைவெளிக்குப் பின் நமது விசுவாசிகளின் பிள்ளைகள் 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்வு எழுத ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். படிப்பில் ஆர்வம் வரவும், தேவன் அவர்களுக்கு பரலோக ஞனத்தைத் தரவும், அதன் மூலமாக தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெறவும் ஜெபியுங்கள்.

- வியாரா பணித்தளத்தில் கப்பட்வன் என்ற கிராமத்தில் புதிதாக ஊழியத்தை ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். அங்கே கூடி வருகிற மக்களுடைய மனதை தேவன் வசனத்திற்கு திறக்கவும் அநேக ஜனங்கள் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் ஜெபியுங்கள். விரைவில் இந்த கிராமத்தில் ஆராதனைக் குழு அமைக்கப்படவும் ஜெபியுங்கள்.

- நமது வியாரா பணித்தளத்தில் பாங்க்ரி கிராமத்தில் வனியாபேனின் முழுக் குடும்பமும் கொரோனாவினால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தனர். சுகவீனத்தில் இருந்து முழுமையாக இன்னும் குணமடையாமல் சரீர அளவிலும் மனதளவிலும் மிகவும் வேதனைப்பட்டு வருகின்றனர். தேவன் முழுக் குடும்பத்துக்கும் நல்ல சுகத்தைக் கொடுக்கவும் அதன் மூலமாக அந்த குடும்பம் முழுவதும் விசுவாசத்திலே பலப்படவும் ஜெபியுங்கள்

- ரித்திக் என்ற 10 வயது சிறுவன் நமது ஊழியர்கள் நடத்தும் சிறுவர் கூடுகையில் தவறாது கலந்துக் கொள்ளும், தேவ வசனத்தின் மேல் ஆர்வமுடைய சிறுவன். அவனுடைய பெற்றோர் கருத்து வேருபாட்டினால் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் குடும்பத்தில் சமாதானமான சூழ்நிலை உருவாகவும் குடும்பமாக அவர்கள் ஆலய ஆராதனையில் பங்கு பெறவும் ஜெபியுங்கள்.

- வியாரா பணித்தளத்தில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் ஆக்காஷின் அப்பா இறந்து விட்டார். அவனுக்கு இரண்டு தங்கைகள் உண்டு, அவன் அம்மா இரட்டைக் குழந்தைகளுடன் நிறைமாத கர்ப்பிணியாக உள்ளார். சிறு வயதிலே தந்தையை இழந்து தவிக்கும் குழந்தைகளுக்காகவும் வருங்காலங்களிலே தேவன் அந்த குடும்பத்தை பாதுகாத்து அரவணைத்து வழிநடத்தவும் ஜெபியுங்கள். இந்தக் குடும்பத்தைப் போல அனாதைகளாக்கப்பட்ட குடும்பங்கள் அநேகம் உண்டு. அவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

- வியாரா பணித்தளத்தில் தகோர் என்ற கிராமத்தைச் சார்ந்த சந்தீப்பாய் என்ற சகோதரர் யானைக் கால் வியாதியனால் மிகவும் கஷ்டப்படுகிறார். தேவன் அவருக்கு விரைவில் நல்ல சுகத்தைத் தரும்படி ஜெபியுங்கள்



காவுட்டன் கிராமத்தில் நடைபெற்ற சுவிசேஷக் கூட்டம்

## சாட்சி

பூர்கியைச் சேர்ந்த சாதுகோட்டா என்ற 51 வயது முதியவர் கடந்த சில வருடங்களாக அடிக்கடி அசுத்த ஆவியினால் பைத்தியம் பிடித்தவர் போல ஆகிவிடுவார். குடும்பத்தினர் அவரை அநேக பூஜாரிகளிடம் அழைத்துச் சென்று பரிகாரங்கள் செய்து வருவது வழக்கம். அவ்வாறு சென்று வந்த சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டு மிகவும் வேதனையை அனுபவித்து வந்தார். கடைசியாக பூஜாரி இனி என்னால் இவரை சரிசெய்ய முடியாது என கைவிரித்து விட்ட நிலையில் பொல்லாத ஆவி மீண்டும் கிரியை செய்யத் தொடங்கியது.

பதறிப்போன இவரது மனைவி இனி பூஜாரிகளிடம் சென்று பிரயோஜனமில்லை, இவரை (ஆலயத்திற்கு) இயேசுவிடம் அழைத்துச்செல்ல முடிவெடுத்து அழுதுகொண்டே நமது விசுவாசி வீட்டிற்கு வந்தனர். நமது விசுவாசி நமது ஊழியர் சகோ விஜயக்குமாரை அழைத்துக்கொண்டு அவர் வீட்டிற்குச் சென்று எல்லோரும் இணைந்து சாதுகோட்டாவிற்காக ஜெபித்தனர். ஆண்டவர் அவர்களுடைய ஜெபத்தைக்கேட்டு அற்புத விதமாக அவருடைய மனதில் ஒரு அமைதியைக் கொடுத்தார். பின்பு அன்று சாயங்காலமே சாதுகோட்டா பூர்கியில் உள்ள நமது ஆலயத்திற்கு வந்து 5 நாட்கள் ஆலயத்திலே தங்கினார். விசுவாசிகள் ஊழியர்கள் எல்லாரும் தொடர்ந்து ஜெபித்து வந்தனர். தேவனுடைய கிருபையால் அவர் அற்புத சுகம் பெற்றார். அவரை நமது ஊழியர் அவருடைய வீட்டிற்கு கொண்டுபோய் விட்டு அவரது வீட்டில் நன்றி ஜெபக்கூட்டம் நடத்தி தேவனை மகிமைப்படுத்தி வந்தார். இந்த அற்புதத்தினால் முழுக்குடும்பமும் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். பல நாட்களாக நிம்மதி இழந்த எங்களுக்கு இயேசு சுகம் கொடுத்தார் என்று மிகுந்த மகிழ்ச்சியுடன் சாட்சிக் கூறி தேவனை மகிமைப்படுத்தினர். இதன் மூலமாக இந்த பகுதியில் ஒரு ஆத்தும அறுவடையை ஆண்டவர் தரும்படியும் இந்த குடும்பத்தினர் விசுவாசத்தில் பெலப்படவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

அன்பரின் பணியில்,

**Dr. G. ஜெயக்குமார் மற்றும் ஊழியர்கள்**

**இந்த மிஷனெரி ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள எங்கள் வங்கி கணக்கில் ECS மூலம் பணம் அனுப்பி உதவலாம்.**

**CANARA BANK, VANNARPETTAI BRANCH, TIRUNELVELI**

**A/C NAME: WESTERN INDIA MISSION**

**A/CNO: 2952101007959**

**IFSCCODE: CNRB0002952**

**(பணம் அனுப்பப்பட்ட விபரத்தையும், M.O மூலம் பணம் அனுப்பி ஊழியங்களுக்கு உதவிசெய்வோரும் 9944306154 என்ற செல்போனுக்கு SMS மூலம் தெரியப்படுத்தினால் உங்களுக்கு ஒப்புகை ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)**

உங்கள் ஜெப தேவைகளுக்கும் மேற்கு இந்திய பகுதிகளில் நடைபெறும் மிஷனெரி ஊழிய விபரங்களை அறிந்து கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எங்கள் மொபைல் எண்கள் மற்றும் முகவரி:


| | | | |
|---|---|---|---|
| Dr. ஜெயக்குமார் | 9894075795 | சகோ. தங்கராஜ் | 9944306154 |
| சகோ. செல்வக்குமார் | 9994040186 | சகோ. அமிர்தராஜ் | 7666982484 |
| சகோ. ஃபெலிக்ஸ் | 9600992654 | சகோ. கோயில்பிள்ளை | 9159827209 |

இணையதள முகவரி : https://westernindiamission.com

*Tirunelveli Office:*
*Western India Mission,*
*C-98, East Rahmath Nagar,*
*Tirunelveli 627 011.*

*North Tamilnadu:*
*Bro. Amirdharaj*
*No: C13, Yadhavar Street,*
*Annai Theresa Nagar,*
*Ambaseshipuram, Mosur,*
*Arakkonam ,Ranipet 631004*


**DIOCESAN OFFSET PRESS, PALAI - PH : 0462 - 2573182**